2,67,588 ரூபாய் ஆகும். ஆனால் அரசாங்கம் செலவழித்திருப்பது 1,23,577 ரூபாய் ஆகும். அதுமட்டுமல்ல, செய்யாற்றில் 'அண்ணா அருளகம்' என்ற கட்டிடம் பத்தாயிரம் ரூபாய் செலவில் இந்தச் சீரணி மூலம் கட்டி முடிக்கப் படும் தறுவாயில் இருக்கிறது.

முற்பகல் 9-30 திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திற்கு 1 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அது முழுவதும் செலவழிக்கப்பட்டதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டம் பெரிய மாவட்டம். அந்தப் பணம் போதவில்லை என்று கோரிக்கை வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அந்த மாவட்டத்திற்குப் பணம் கூட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்களுடைய இந்த யோசனையை எதிர்காலத்திலே பரிசீலனை செய்யலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, சீரணிப் பணிகளுக்காகச் செலவழிக்கப்படுகின்ற பணத்திலே ஏதாவது மானியமாக மத்திய அரசு தருகின்றதா? அப்படித் தருவதில்லையென்றால் இனியாவது மத்திய அரசு தர வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனையும் அரசு நினைவிலேகொண்டு ஆவன செய்ய முயற்சிக்கும்.

தீண்டாமை ஒழிப்பு

* 225 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்வதற்காக தனியாக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதில் பணியாற்றுபவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :

(அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, தீண்டாமையை ஒழிப்பதற்காகக் குழுக்கள் அமைக்கப்பட்டாலும் வேறு வழிகளிலே தீண்டாமையை ஒழிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தீண்டாமையை ஒழிப்பதற்குச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு குழுக்கள், தாலுக்கா வாரியாக ஒரு குழுவும், மாவட்ட வாரியாக ஒரு குழுவும் அமைக்கப்பட்டு அந்தக் குழு பிரச்சாரத்தில் தீவிரமான பங்குகொள்ளும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, இன்று நாட்டிலே கல்வி வேகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது. தீண்டாமையை அனுசரிக்

1971 டிசம்பர் 10]

கிறவர்கள் த்ண்டனை பெறுவார்கள் என்பதை அறியாதவர்கள் அதிகமாக இல்லை. குடிசைவாழ் பகுதிகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு அங்கே தேவையான கழிவிடங்களை அமைத்துத் தருவதற்கும் மேலும் அடிப்படையான சில வசதிகளைச் செய்து தருவதற்கும் அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுதே அவர்கள் வாழ்கின்ற பகுதிகளிலே சுத்தமாக வைத்து இருக்கவேண்டுமென்பதை ஊக்குவிக்கும் பொருட்டு 300 ரூபாய் மதிப்புள்ள வானொலிப் பெட்டிகள் பரிசாகத் தரப்படுகின்றன. அதன்மூலம் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் என்பது மிகப் பழமையான ஒரு வழியாக மாறிவிட்டது. தீண்டாமை இருந்து கொண்டுவருவதற்குக் காரணம் பொருளாதார நிலைதான் என்பது தொழிற்சாலைகளிலே தொழிலாளர்களும் மற்றவர்களும் நடந்து கொள்ளக்கூடிய நிலைமையைப் பார்த்தால் நன்ருகப் புரிந்துகொள்ளலாம். தீண்டாமை ஒழிக்கப்படவேண்டுமென்ருல் அவர்களுடைய அந்தஸ்து உயர வேண்டும். எனவே அந்தஸ்தை உயர்த்துவதற்கு அதிகக் கவனம் செலுத்துவதற்கு வழிசெய்தால் நன்ருக இருக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பொருளாதார ஏற்றத்தினுல் மாத்திரம் தீண்டாமை ஒழிந்துவிடும் என்று சொல்லமுடியாது, சமுதாய மாற்றமும் வேண்டும். ஒரு மறுமலர்ச்சி சமுதாயத்திலே இருந்தால்தான் மனமாற்றம் ஏற்படும். பொருளாதார ஏற்றத்தைவிட சமுதாய மனமாற்றம் தான் முக்கியம் என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. நா. வீராசாமி : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனை நீக்கிவிடுமாறு ஆணையிடுகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : சபாநாயகர் அவர்களே, அரிசன மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு வகைகளிலே பொருளாதார உதவி போன்ற மற்ற உதவிகள் எல்லாம் செய்தாலும் பம்பாய் மாநிலத்தில் ஏற்படுத்தியிருப்பது போன்ற அரிசனங்களுக்கு ஒரு பைனுன்ஷியல் கார்ப்பரேஷன் அவர்களுக்காக ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, சுத்தமாக வைத்திருக்கின்ற சேரிகளுக்கு பரிசுகள் 300 ரூபாய் அளவுக்குக் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்னையிலே உள்ள சேரிகளில் எத்தனைக்கு அப்படிப்பட்ட பரிசுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சென்னையிலே சேரிகள் என்று தனியாக எதுவும் நீக்கிவைக்கவில்லை. அவர்களாவே சேர்ந்து பல வட்டங்களில் வாழ்கிருர்கள். சென்னையில் இந்தச் சிக்கல் எழவில்லை.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.